DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 327/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-5 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.அந்தோணிசாமி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. சிந்தாதுரை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 to A4 absent. u/s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 16.10.2025

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ஆர்எஸ்மங்கலத்தில் வசித்து வருகிறேன். டெய்லராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியும். எனது உறவினர் தான். இவ்வழக்கின் 1 முதல் 4 எதிரிகளை எனக்கு தெரியும்.அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. பிரபாகரனுக்கும் 3ம் எதிரி முரளி என்னும்

பெண்ணுக்கும் பல வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. அதன்பின் பிரபாகரனும் 3ம் எதிரி முரளியும் கருத்து வேறுபாட்டால் நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெற்றுவிட்டனர்.அதன்பின் பிரபாகரன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.அதனால் இவ்வழக்கின் எதிரிகள் பிரபாகரன் ஊருக்கு வரும்போதெல்லாம் பிரச்சனை செய்வார்கள் நான் சமரசம் செய்து வைப்பேன்.கடந்த 24.09.2022 தேதி மதியம் 02.00 மணியளவில் அ.சா.4 ஜோசப்மேரி எனக்கு போன் செய்து எதிரிகள் பிரபாகரனின் இருசக்கரவாகனத்தை தீ வைத்து எறித்து விட்டதாக சொல்லி என்னை வர சொன்னார், நானும் உடனே புறப்பட்டுபோனேன். நான் சம்பவயிடத்திற்கு செல்லையில் அங்குபோலிசார் வந்து விட்டனர்.

2. மேற்படி போலிசார் பிரபாகரனையும் எதிரிகளையும் அழைத்து பேசி விட்டு அனுப்பிவைத்தனர். அதன்பின் நான் சம்பவயிடத்தில் இருந்து கிளம்பிவிட்டேன்.போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. போலிசார் என்னை எப்போது விசாரித்தனர்என்றால் 24.09.2022 தேதி மாலை 07.00 மணியளவில் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அதன்பின் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு ஜோசப்மேரி எனக்கு போன்செய்யவில்லை என்றும் அதன்பின் நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. ஜோசப்மேரி எனக்கு போன் செய்து எதிரிகள் பிரபாகரனின் வாகனத்தை எறித்து விட்டதாக தெரிவித்தார் என பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஜோசப்மேரி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது மனைவியின் அக்கா ஆவார். இவ்வழக்கின் புகார்தாரர் எனது உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.